Prot. No. 0572/2026

## ஆயர் பேரவைக்கு பிந்தைய சுற்றறிக்கை

சீரோ-மலபார் திருச்சபையின் உயர்ப்பேராயர் மார் ரா∴பேல் தட்டில், தம்மோடு இணைந்து பணியாற்றும் பேராயர்களுக்கும், ஆயர்களுக்கும், குருக்களுக்கும், துறவிகளுக்கும், தமது ஆயர் பணிப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்கள் அனைவருக்கும் எழுதுவது:

ஆண்டவரின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

ஈசோ மெசியாவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

சீரோ-மலபார் திருச்சபையின் 34-வது ஆயர் பேரவையின் இரண்டாம் அமர்வு 2026 ஆகஸ்ட் 17 முதல் 28 வரை திருச்சபையின் தலைமையகமான காக்கநாடு, மவுண்ட் சென்ட் தாமஸில் வைத்து நடைபெற்றது. திருச்சபையின் நம்பிக்கை வாழ்வையும் ஆன்மீகப் பராமரிப்பு செயல்பாடுகளையும் இக்காலகட்டத்தின் சவால்களுக்கு இன்னும் பலனுள்ள வகையில் பதிலளிக்கும் விதமாக புதுப்பிப்பதற்கும் வலுப்படுத்துவதற்குமான பல்வேறு வழிகள் ஆயர் பேரவையில் விரிவாக ஆலோசிக்கப்பட்டன. ஜெபத்திற்கும், சகோதரத்துவத்திற்கும், திருச்சபையின் ஒன்றிப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து நடைபெற்ற இந்த ஆயர் பேரவை தூய ஆவியாரின் அருளால் ஆயர்கள் ஒன்றாக இறை விருப்பத்தை நாடிய இறையாசீர் நிறைந்த நாட்களாக அமைந்தது. ஆயர் பேரவைக் கூட்டம் வெற்றியடைய செபித்த அனைவரையும் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

### திருச்சபை சமூகத்தை வலுப்படுத்துதல்

2024-ஆம் ஆண்டு பாலா மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்ற சீரோ-மலபார் மேஜர் ஆர்க்கி எபிஸ்கோப்பல் மன்றத்தின் தொடர்ச்சியாக நாம் “சமுதாய வலுப்படுத்துதல் ஆண்டை“ கொண்டாடி வருகிறோம். தற்கால உலகின் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள திருச்சபை உறுப்பினர்களின் ஆன்மீக, சமூக வலுப்படுத்துதல் இன்றியமையாத ஒன்று என்ற உணர்வே நம்மை இந்த கொண்டாடத்திற்கு வழிவகுத்தது. பல்வேறு நாடுகளில் சிதறி வாழும் சமுதாய உறுப்பினர்களை ஒரே நம்பிக்கை சமூகமாக நிலைநிறுத்துவது திருச்சபையுடனான உறவும் திருச்சபை உறுப்பினர்களாக இருப்பதில் உள்ள பெருமித உணர்வுமே ஆகும்.

மக்கள் தொகை குறைவு, திருச்சபை உணர்வு குறைபாடு, விவசாயம் மற்றும் வணிகத் துறைகளில் புதிய தலைமுறையினரின் ஆர்வமின்மை, சமூகத்தின் முதன்மைப் பாதைகளில் நமது பங்களிப்பு இல்லாமை போன்றவை நமது சமூகம் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களாகும். இச்சவால்கள் நம்மை அஞ்ச வைப்பதற்குப் பதிலாக புதிய செயல்பாட்டுப் பாதைகளைக் கண்டறிவதற்கான ஊக்கமாக மாற வேண்டும். மீட்பரும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்ற முறையில், ஆன்மீக உறுதியில் ஆழப்பட்டு இன்னும் அதிக ஆற்றலோடு நற்செய்தியின் சாட்சிகளாக வாழ நாம் முயற்சிக்க வேண்டும். அதோடு, இளம்தலைமுறையை நம்பிக்கையிலும் திருச்சபை உணர்விலும் உறுதிப்படுத்தவும் அவர்களின் திறமைகளையும் அறிவையும் வளர்த்தெடுப்பதற்குமான முயற்சிகள் இன்னும் தீவிரமாக நடக்க வேண்டும். சமுதாய வலுப்படுத்துதல் ஆண்டில் நமது மறைமாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ள பல்வேறு செயல்பாடுகள் திருச்சபையையும் சமுதாயத்தையும் வலுப்படுத்தும் என்று ஆயர் பேரவை மதிப்பீடு செய்தது. இதற்காக சுயநலமின்றி உழைக்கும் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

### ஆழப்பட வேண்டிய நம்பிக்கை வாழ்வு

குடும்பங்கள், இளைஞர்கள், சிறுவர்களின் நம்பிக்கை உருவாக்கமும் வலுப்படுத்துதலும் திருச்சபையின் பராமரிப்பின் ஒரு பகுதியாகும். உலகமெங்கும் சீரோ-மலபார் திருச்சபை வளர்ந்ததன் பின்னணியில் புலம்பெயர்ந்த மக்களின் நம்பிக்கை ஆர்வம் முக்கிய பங்கு வகித்தது என்பது மறுக்க முடியாத உண்மை. தங்கள் முன்னோர்களின் அதே நம்பிக்கை ஆர்வத்தோடு பிள்ளைகளை வளர்க்க புதிய தலைமுறையின் பெரும்பான்மையான பெற்றோர்கள் முயற்சிக்கிறார்கள் என்பது நமக்கு பெருமையளிக்கிறது. எனினும், இன்று அன்றாட வாழ்வின் தவிர்க்க முடியாத பகுதியாக மாறியுள்ள டிஜிட்டல் உபகரணங்களால்

குறிப்பாக சமூக ஊடகங்களால் பாதிக்கப்படுவோரிடம் வெளிப்பட்டு வரும் கலாச்சார நாத்திகத்தின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில், நமது குடும்பங்களின் நம்பிக்கை பயிற்சி மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. ஒரே மீட்பரான ஈசோ மெசியாவைப் பற்றியும் கிறிஸ்துவின் மறை உடலான திருச்சபையைப் பற்றியுமான புரிதல்கள் நம்பிக்கை வாழ்வின் மூலம் தொடர்ச்சியாக ஆழப்பட வேண்டும். நம்பிக்கை வாழ்வில் குடும்பங்களையும் இளைஞர்களையும் சிறுவர்களையும் காலத்திற்கேற்ப வளர்க்க உதவும் வகையில் ஆயர்பணி செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். மதிப்பீடுகளின் இழப்பு, தனி மனிதவாதம், பொருளாதார நெருக்கடிகள், தலைமுறை இடைவெளி, டிஜிட்டல் கலாச்சாரத்தின் ஆதிக்கம் போன்ற பல்வேறு சவால்களை நமது குடும்பங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலையில், குடும்ப வாழ்விற்கான இறை அழைப்பை மதிக்கவும் திருமணம் என்னும் திருமறைப் பொருளின் அருள்களைப் பெற்றுக்கொள்ளவும் இளைஞர்களை ஆயத்தப்படுத்த வேண்டும். அதோடு குடும்பங்களையும் சமூகத்தையும் அழிக்கும் மது, போதைப்பொருள்கள் போன்ற சமூக தீமைகளுக்கு எதிரான போராட்டத்தையும் விழிப்புணர்வையும் நாம் இன்னும் வலுப்படுத்த வேண்டும்.

**மறைப்பணிக்கு புதிய ஊக்கம்**

இந்தியா முழுவதும் மறைபரப்புப் பணியும் நற்செய்தி அறிவிப்பும் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது முதல், பலவரம்புகளுக்குள் இருந்துகொண்டே நற்செய்திப் பணிகளை சீரோ-மலபார் திருச்சபை செய்து வருகிறது. ”கிறிஸ்தவனாக இருத்தல் என்றால் நற்செய்தி அறிவிப்பாளனாக இருத்தலும் ஆகும்” (CCC 900) என்ற உணர்வு நமக்கு இருக்க வேண்டும். ”நீங்கள் உலகமெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்” (மாற்கு 16:15) என்ற கட்டளை பெற்றவர்கள் என்ற முறையில், நற்செய்தி அறிவிப்பு நமது நம்பிக்கை வாழ்வின் பிரிக்க முடியாத பகுதியாகும். இந்திய அரசியலமைப்பின் 25-வது பிரிவின் மூலம் எந்த மதத்தையும் நம்பவும், மத சடங்குகளைப் பின்பற்றவும், பிரச்சாரம் செய்யவுமான உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது. நமது திருச்சபையின் சேவைகள் நமது நம்பிக்கையில் இருந்து உருவாகி, ஆனால் மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு அனைவரையும் அரவணைப்பதையே மையமாக கொண்டுள்ளது. ஆனால், கட்டாய மதமாற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து நமது நம்பிக்கை வாழ்வையும் சமூக சேவைகள், கல்விப் பணிகளையும் தடைசெய்யும் காரணிகள் இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மைக்கு ஏற்றதல்ல என்பதையும் நாம் உணர வேண்டும்.

2024-ஆம் ஆண்டின் மேஜர் ஆர்க்கி எப்பிஸ்கோப்பல் மன்றத்தின் பரிந்துரைப்படி “ஜீவன்ஜோதி“ என்ற பெயரில் பொதுநிலையினருக்கான மறைப்பணி இயக்கம் திருச்சபை சார்பாக தொடங்கப்பட்டுள்ளது. 2033-ஆம் ஆண்டின் மீட்பின் நிகழ்வின் மகா ஜூபிலியை இலக்காகக் கொண்டு திருச்சபையின் மறைப்பணிக்கு புதிய உணர்வு தரும் திட்டமாக ஜீவன்ஜோதி உருவாக்கப்படுகிறது. இவ்வியக்கத்தின் பகுதியாக ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மறைப்பணிகளைத் தொடங்கவும் வலுப்படுத்தவும் அழைப்பு விடுக்கப்படுகிறது. மிகவும் கடினமான சூழ்நிலைகளிலும் இயேசுவுக்கு சாட்சி பகரும் மறைப்பணியாளர்களை திருச்சபை மிகுந்த அன்போடு வாழ்த்துகிறது.

**தீர்வு காணப்பட வேண்டிய வாழ்வாதாரப் பிரச்சினைகள்**

கேரளாவைச் சேர்ந்த சில நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களோடு உரையாடி, திருச்சபையும் சமூகமும் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்ளவும் தீர்வுகளைத் தேடவும் ஆயர் பேரவையின் ஆயர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. தேவையான ஆலோசனைகளுக்குப் பிறகு, நீதிபதி ஜே.பி. கோஷி கமிஷன் அறிக்கையைக் காலவரையறைக்குள் அமல்படுத்த வேண்டும் என்றும், ஆசிரியர் நியமன நெருக்கடி உட்பட கல்வித்துறை எதிர்கொள்ளும் கடுமையான பிரச்சினைகளுக்கும் பல ஆண்டுகளாகத் தீர்வின்றி நீடிக்கும் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கைகள் மக்கள் பிரதிநிதிகளிடம் முன்வைக்கப்பட்டன. அதோடு, சட்டப்படி செயல்படும் கல்வி மற்றும் சமூக நிறுவனங்களின் செயல்பாடுகளைப் பாதிக்கக்கூடிய சட்டங்கள் கொண்டுவரப்படுவதில் உள்ள அச்சமும் பகிர்ந்துகொள்ளப்பட்டது. நாட்டின் சட்டங்களையும் அரசியலமைப்பு உரிமைகளையும் மதித்து செயல்படும் நிறுவனங்களைப் பாதிக்கும் சட்ட விதிகள் உருவாவது மிகுந்த

கவலையளிக்கிறது. அதேவேளையில், கடினமான பாதைகளில் பயணித்துக்கொண்டுதான் திருச்சபை என்றும் உலகின் ஒளியாக நிலைபெற்றுள்ளது என்பதை நாம் மறக்கக் கூடாது. சவால்களைக் கடந்து உண்மைக்கும் நீதிக்கும் மனித கண்ணியத்திற்கும் ஆதரவாகக் குரலெழுப்பி சமூகத்தின் நன்மைக்கான திருச்சபையின் பணியை இன்னும் வலுவாக நாம் தொடர்வோம்.

**ஒன்றிப்பு நமது பொறுப்பு**

பிரச்சினைகளும் சவால்களும் இருந்தாலும், ”விண்ணிலும் மண்ணிலும் அனைத்து அதிகாரமும் பெற்றுள்ள” (மத்தேயு 28:18) நமது ஆண்டவரிடமே நமது நம்பிக்கை உள்ளது. “ஆண்டவர் கூடவே நடக்கும் மக்கள்“ என்ற முறையில் (விப. 33:14) இன்னும் உறுதியோடு முன்னேற வேண்டியவர்கள் நாம். நமது திருச்சபையின் ஒன்றிணைந்த பயணத்தில் ஒரு பெரிய மைல்கல் பலிபீடத்தின் ஒன்றிப்பாகும். வெவ்வேறான திருப்பலி ஒப்புகொடுக்கும் முறைகள் நமது திருச்சபையின் ஒன்றிப்பு உணர்வை ஆழமாகப் பாதித்தது என்ற உணர்வில்தான் 1999 முதல் ஒன்றிப்பு முயற்சிகள் தொடங்கப்பட்டன. அதை முழுமையாக அமல்படுத்த முடியாமல் போனது வருத்தத்திற்குரியது. ஆனால் சொற்களால் ஒருவரையொருவர் காயப்படுத்தி ஒருபோதும் ஒன்றிப்பை சாத்தியமாக்க முடியாது என்பதை நாம் உணர வேண்டும். திருத்தந்தை பதினான்காம் லியோ அழைப்பு விடுத்தது போல, ”நமது வார்த்தைகளை ஆயுதமற்றதாக்குவோம் அதன்மூலம் உலகை ஆயுதமற்றதாக்க நாம் உதவுவோம். எனவே பயன்படுத்தும் வார்த்தைகள், நம்மிடம் உள்ள முன்முடிவுகள், அவற்றில் மறைந்துள்ள அல்லது வெளிப்படையாக உள்ள வன்முறைப் போக்குகள் குறித்து நாம் அனைவரும் ஆத்ம பரிசோதனை செய்ய வேண்டும்” (மனித மாண்பு, 214).

தொடர் ஜெபமும் தனிப்பட்ட மனமாற்றமும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு மட்டுமே நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும். “நீதியின்றி அமைதி நிலவாது“ என்ற உண்மையை ஏற்றுக்கொண்டாலும், நீதிமன்ற வழக்குகள் வழியாக அல்ல திருச்சபையில் அமைதியைப் பெற வேண்டும் என்பதை அனைவரும் உணர வேண்டும். வெற்றி தோல்விகளில் அல்ல, சிலுவையில் அறையப்பட்டவரின் கீழ்ப்படிதல் வழியாகவே மீட்பு கிடைக்கிறது. இறை அருளை நம்பி ஆயர்களின் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு ஒன்றிப்பின் தூதர்களாக மாற நாம் முயல்வோம். ”இறை அருள் மோதல்களை உடனே மாயாஜாலமாக இல்லாமல் ஆக்குவதில்லை மாறாக, அது தீமைக்கு எதிரான உயிரோட்டமிக்க எதிர்ப்பிற்கும் தீமையை வெல்வதில் உள்ள அதிசய படைப்பாற்றலுக்கும் ஊக்கமளிக்கிறது” (மனித மாண்பு, 211) என்ற திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் போதனை மிகவும் பொருத்தமானது. நன்மையின் புதிய பரிமாணங்களைத் தேடி எல்லைகளைக் கடக்க நாம் முயற்சிப்போம்.

**காலத்திற்கேற்ற குருத்துவப் பயிற்சி**

குருத்துவ இறை அழைப்புகளால் திருச்சபையை வளப்படுத்தும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நாம் நன்றி கூறுவோம். தற்கால உலகில் குருக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் ஆயர்பேரவையில் விவாதிக்கப்பட்டு, தேவையான தலையீடுகளைச் செய்ய குருக்களுக்கான ஆணையத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. குருத்துவ மாணவர்களின் பயிற்சியைக் காலத்திற்கேற்ப புதுப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டம் இளம் குருத்துவ கல்லூரி முதல் தொடங்கப்பட்டது மகிழ்ச்சிகரமானது. நம்பிக்கை ஆர்வத்தால் நிறைந்து திருச்சபையின் மனிதர்களாக கிறிஸ்துவுக்கு சாட்சி பகர குருக்களால் முடியும் போதுதான் உலகின் எல்லைகள் வரை நற்செய்தி பரவுகிறது.

துறவற வாழ்விற்கான இறை அழைப்புகளைப் பற்றியும் திருச்சபை இறைவனுக்கு நன்றி கூறுகிறது. துறவற சமூகங்கள் வழியாக அதிகமான இறையருளை இறைவன் நமக்கு பொழிகிறார். கருணைசார்கல்வித் துறைகளிலும் மறைப்பணி செயல்பாடுகளிலும் தியாகத்தோடு பணியாற்றும் துறவிகள் நற்செய்தியின் நறுமணத்தை உலகில் பரப்புபவர்களாக திகழ்கின்றனர். எனவே துறவற வாழ்விற்கான இறை அழைப்புகளை ஊக்குவிப்பதும் செபிப்பதும் அவசியமாகும். ஆயர்பேரவை கூட்டத்தின் பகுதியாக துறவற சமூகங்களின் உயர் அதிகாரிகளோடு நடத்திய சந்திப்பு மிகவும் பலனுள்ளதாக இருந்தது.

**சீரோ-மலபார் மரபுசார் மற்றும் ஆய்வு நிலையம்**

சீரோ-மலபார் திருச்சபையின் பழமையான, வளமான பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும், கற்பிக்கவும், ஆராய்ச்சிகள் செய்யவும் உதவும் ஹெரிட்டேஜ் அண்ட் ரிசர்ச் சென்டரைப் பொதுச் சமூகத்திற்காகத் திறந்து கொடுக்க நம்மால் முடிந்தது. இங்கு அமைக்கப்பட்டுள்ள சென்ட் தாமஸ் ஹெரிட்டேஜ் அருங்காட்சியகம் கேரளாவின் முக்கியமான கிறிஸ்தவ அருங்காட்சியகங்களில் ஒன்றாகும். காக்கநாடு மவுண்ட் சென்ட் தாமஸில் நிறுவப்பட்டுள்ள இந்தப் பாரம்பரிய மையத்தையும் அருங்காட்சியகத்தையும் பார்வையிட அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன்.

**கோட்டயம் உயர்மறைமாவட்டத்திற்கு உதவி ஆயர்**

கோட்டயம் உயர்மறைமாவட்டத்தின் உதவி ஆயராக மதிப்பிற்குரிய அருட்தந்தை ஆனிமூட்டில் தாமஸ் அவர்களை நியமித்தது சீரோ-மலபார் திருச்சபை முழுமைக்கும் மகிழ்ச்சியான செய்தியாகும். மதிப்பிற்குரிய அருட்தந்தை தாமஸ் அவர்களுக்கு அனைத்து இறை ஆசிகளும் கிடைக்கப் செபிப்பதோடு அவரது பணிகளுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

இறை பராமரிப்பில் நடைபெற்ற ஆயர்பேரவை, நமது திருச்சபையை இறை விருப்பத்திற்கு ஏற்ப உருவாக்குவதற்கான புதிய பொறுப்புணர்வை நம்மில் எழுப்புகிறது. பிரச்சினைகளில் தளராமல், சவால்களில் கலங்காமல், ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து நம்பிக்கையிலும் ஒன்றிப்பிலும் மறைப்பணி ஆர்வத்திலும் நாம் முன்னேறிச் செல்வோம்.

கேரளாவில் பருவமழையைத் தொடர்ந்து ஏற்பட்ட பேரிடர்களில் துன்பப்படுவோரின் குடும்பங்களோடு நமது திருச்சபையின் இதயப்பூர்வமான ஒற்றுமையை பதிவு செய்கிறோம். அதோடு நேபாளத்தில் நடந்த கொடூரமான இயற்கை பேரிடரில் அன்பானவர்களை இழந்தவர்களின் வேதனையில் பங்கெடுப்பதோடு வீடும் வாழ்வாதாரமும் இல்லாமல் போனவர்களுக்காக செபிக்கவும் செய்கிறோம்.

தூய கன்னி மரியா, மார் தோமா, நமது திருச்சபையின் அனைத்துப் புனிதர்கள் மற்றும் அருளாளர்களின் பரிந்துரையை வேண்டி, நமது திருச்சபையையும் குடும்பங்களையும் ஆண்டவரின் கரங்களில் சமர்ப்பிப்போம். தூய ஆவியார் நமது பயணத்தை வழிநடத்தி கிறிஸ்துவோடு இணைந்த ஒரு திருச்சபையாக இன்னும் உறுதியோடு நற்செய்திக்கு சான்று பகர நம்மை ஆசீர்வதிப்பாராக.

காக்கநாடு மவுண்ட் சென்ட் தாமஸில் உள்ள உயர்பேராயர் அலுவலகத்தில் இருந்து 2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ஆம் தேதி வழங்கப்பட்டது.

மார் ரா.ஃ.பேல் தட்டில்

சீரோ மலபார் சபையின் உயர்பேராயர்

**Syro-Malabar Major Archiepiscopal Curia** | **Mount St. Thomas**, P.B. No. 3110, Kakkanad P.O., Kochi - 682030, Kerala, India | Tel: 0484-2428271 | Email: majorarchbishop@gmail.com Website: www.syromalabarchurch.in